




# தேர்தல் கண்காணிப்பாளர் கையேடு








பஃவ்ரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கண்காணிப்பாளர்களின்

# கைந்நூல்

## பஃவ்ரல்

பஃவ்ரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கண்காணிப்பாளர்களின் கைந்நூல்

## ப.்.வ்ரலின் அமைப்பு, வேலைத்திட்டம், நோக்கங்கள்

### ப.்.வ்ரலின் தோற்றம்

People's Action for Free and Fair Elections எனும் ஆங்கிலச் சொற்றொடலின் தலைப்பெழுத்துக்களால் உருவாக்கப்பட்ட வார்த்தையே PAFFREL ஆகும். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு என்பது இதன் பொருள். இலங்கையில் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட முதலாவது மக்கள் அமைப்புகளின் வலையமைப்பு இதுவாகும். 1988 டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக 1987 ஆம் ஆண்டில் பல அரச சார்பற்ற அமைப்புகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய இவ்வமைப்பானது இலங்கையில் நடைபெற்ற முக்கிய அனைத்துத் தேர்தல்களையும் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டது.

### அமைப்பும் வேலைத்திட்டமும்

ப.்.வ்ரலின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலாப நோக்கற்ற ஓர் அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனுடன், இணைந்திருக்கும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக பணிப்பாளர் சபையொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதனுடைய பிரதான பங்காளியாக அடிமட்டத்தில் இயங்கும் பெரும் எண்ணிக்கையான அமைப்புகளைக்கொண்ட சர்வதோதயம் சிரமதான இயக்கம், அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் மாநாடு, சமயத்திற்கும் சமூகத்திற்குமான மத்திய நிலையம், தேசிய சமாதானப் பேரவை, சனசமூகக் கல்வி மத்திய நிலையம், செடெக் (SEDEC)இ சமயத்திற்கும் சமாதானத்திற்குமான தேசிய மாநாடு மற்றும் சமயக் குரவர்கள் மாநாடு என்பனவே அவையாகும்.

தேர்தலைக் கண்காணிப்பதற்கான முயற்சியானது ப.்.வ்ரலின் வலையமைப்பு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டம் தோறும் ப.்.வ்ரல் இயக்கத்தினால் மாவட்ட அமைப்புகள் நிறுவப்படும். அவற்றின் மூலம் அந்தந்த மாவட்டங்களின் அடிப்படை ஏற்பாட்டு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு, கண்காணிப்புப் பணிகளுக்காக தொண்டர் ஊழியர்களை ஈடுபடுத்தல், பயிற்றுவிப்பு நடவடிக்கைகளின் ஏற்பாடு, அமுல்படுத்துகை என்பன மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக பெவ்ரல் கண்காணிப்பு நடவடிக்கைகள் பின்வரும் மூன்று அம்சங்களை உள்ளடக்கும்:

- ☐ வேட்பாளர்களின் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து வாக்களிப்பு இடம்பெறும் தினத்திற்கு முந்திய நாள் வரை நடைபெறும் தேர்தல் பிரசாரம் (தேர்தலுக்கு முந்திய கட்டம்)
- ☐ வாக்களிப்பு தினம் (தேர்தல் நடைபெறும் தினம்)
- ☐ தேர்தல் நடைபெறும் தினத்தைத் தொடர்ந்து வருகின்ற இரண்டு வார கால எல்லை (தேர்தலுக்குப் பிந்திய கட்டம்)
- ☐ கண்காணிப்புப் பணிகளுக்காக ப.்.வ்ரல் இயக்கம் பல்வேறு விதமான கண்காணிப்பாளர் குழுக்களை பணியில் ஈடுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்காணிப்பாளர் ஒருவர் வீதம் தேர்தல் நடைபெறும் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்தில் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், வாக்களிப்பு ஆரம்பித்தது முதல் அது முடிவடையும் வரையில் அவர் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார். அவர் நிலைகொள் (இடவமைவான) கண்காணிப்பாளர் என அழைக்கப்படுவார்.

- தபால்மூல வாக்களிப்பு நடைபெறும் தினத்தன்று தபால் வாக்களிப்பு நிலையத்தினுள் ஒரு கண்காணிப்பாளர் வீதம் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், அவர் வாக்களிப்பு ஆரம்பித்தது முதல் அது முடிவடையும் வரையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார். அவர் தபால்மூல வாக்களிப்பு கண்காணிப்பாளர் என அழைக்கப்படுவார்.

- தேர்தல் நடைபெறும் தினத்தன்று பிரதேச செயலக மட்டத்தில் பேணிச் செல்லப்படும் பிரதேச சர்வ கட்சி நடவடிக்கை கூடத்தில் கண்காணிப்புப் பணிகளில் உதவும் கண்காணிப்பாளர் பிரதேச சர்வகட்சி நடவடிக்கைக்கூட கண்காணிப்பாளர் என அழைக்கப்படுவார்.

- மற்றுமொரு சாரார், நடமாடும் குழுக்களாக பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், ஒவ்வொரு குழுவுக்கும் வாக்களிப்பு நிலையங்களில் சில வீதம் பொறுப்பு ஒப்படைக்கப்படும். வாக்களிப்பின்போது அவர்கள் குறித்த நிலையங்களுக்குச் செல்வர். இக்குழுக்கள் நடமாடும் கண்காணிப்பாளர் குழுக்கள் என அழைக்கப்படும். குழுவொன்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 ஆக அமையும்.

தேர்தலை உத்தியோகத்தர்கள், வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், வாக்களிப்பு நிலைய முகவர்கள், ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் ஒரு வேட்பாளர் வீதமும், வாக்களிப்பில் ஈடுபட்டுள்ள வாக்காளர்கள் ஆகியோருக்கு மாத்திரம் தற்போது அமுலிலுள்ள தேர்தல் சட்டங்களின்படி வாக்களிப்பு நிலையமொன்றில் தங்கியிருக்க முடியும்.

2004 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரையின் பிரகாரம் ப:.வ்ரல் இயக்கத்தின் கண்காணிப்பாளர்களுக்கும், தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் கண்காணிப்பாளர்களுக்கும் தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் கண்காணிப்பாளர்களுக்கும் வாக்களிப்பு நிலையத்தில் பிரவேசிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், அவர்களின் வாக்குகள் எண்ணும் மத்திய நிலையங்களில் பிரவேசிக்க முடியாது.

## தேர்தல் கண்காணிப்பின் நோக்கம்

### ப:.வ்ரல் இயக்கத்தின் பிரதான நோக்கங்களாவன:

- வாக்களிப்பின்போது தமது அடிப்படை ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை அமுல்படுத்தி தாம் வாக்களிக்க உரிமையுள்ள சகல தேர்தல்களிலும் வாக்களிக்க வாக்காளர்களை வழி நடாத்தலும் உற்சாகப்படுத்தலும்.

- தேர்தலுக்கு முன்னும் தேர்தலின்போதும் தேர்தலின் பின்னரும் நிகழக்கூடிய வன்செயல்கள், முறைகேடான நடவடிக்கைகள் என்பவற்றைத் தவிர்ப்பதற்கு சனசமூக செயற்பாடுகளை மேம்படுத்தல்.

- நாடு முழுவதிலும் சகல பிரதேசங்களிலும் தேர்தல் நடைபெறும் விதம் குறித்து விழிப்புடன் இருந்து தேர்தல் சட்ட மீறல்களைப் பதிவுசெய்தலும் அறிக்கையிடலும்.

- தேர்தலுடன் சம்பந்தப்பட்ட தற்போதைய செயன்முறைகளையும் நிறுவனங்களையும் மேலும் சிறப்பாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான யோசனைகளை முன்வைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப∴வ்ரலினால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன:**

1) தேர்தல் பிரசாரத்தின்போதும் தேர்தல் நடைபெறும் தினத்தன்றும் வன் செயல்களையும் தகாத நடவடிக்கைகளையும் தடுப்பதற்காகவும்,

2) நாட்டில் நல்லாட்சியொன்றுக்கான நியமங்களை ஏற்படுத்துவதற்கும் அதனைப் பேணிச் செல்வதற்கும் உதவும் மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பை விருத்தி செய்வதற்கும்,

3) மக்களுக்கு உண்மையாகவே பொறுப்புக்கூறும் அதேபோல், ஊழல் மோசடிகள் அற்ற நேர்மையான அரசியல் தலைமைத்துவமொன்றையும் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பதற்கும் உறுதுணையாக அமையும் விதத்தில் அவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

## கண்காணிப்பாளர்களுக்கான நடத்தைமுறைக் கோவை

ப∴வ்ரல் இயக்கத்தினால் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள தேர்தலுக்கான நடத்தைமுறைக் கோவை எனும் கைந்நூலில் அடங்கியுள்ள விதிகள் தொடர்புபட்ட சகல விடயங்களிலும் கண்காணிப்பாளர்களால் பின்பற்றி ஒழுகப்பட வேண்டும். (தேர்தல் நடத்தைமுறைக் கோவை எனும் சிறு நூலில் பார்க்க)



இத்தேர்தல் நடத்தைமுறைக் கோவையானது தேர்தலொன்றில் பங்குபற்றும் அனைவரினதும் செயற்பாடுகளில் அவர்களுக்கு வழிகாட்டும் ஒழுங்குமுறைகளும் நியமங்களும் பற்றிய பயனுள்ள ஒரு சட்டகமாகும். இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்லொன்றை நடாத்துவதற்கு அவசியமான சூழ்நிலை காணப்படுகின்றதா என்பதைத் தீர்மானிக்க பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வழிகாட்டல்களைத் தருகின்றது.

தேர்தல் வேட்பாளர் அல்லது கட்சியைக் கருதாமல் தேர்தல் செயன்முறையின் நேர்மைத்தன்மை, வாக்காளர்களின் உரிமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதே கண்காணிப்பாளர்களின் முதன்மைக் கடமையாகும். இதற்காக கண்காணிப்பாளர்கள், ப∴வ்ரல் இயக்கத்தினால் கண்காணிக்கப்படும் தேர்தல்களுடன் தொடர்புடைய விடயங்களிலும் சகல கண்காணிப்பாளர்களும் முற்றிலும் நடுநிலையாகவும் பக்கச்சார்பின்றியும் இருக்க வேண்டும்.

பக்கஞ்சாரா நடத்தை என்பது சகல ப∴வ்ரல் கண்காணிப்பாளர்களும் ஆதரவு அல்லது குறையேதும் இன்றி முறைகேடான நடவடிக்கைகளையும் தேர்தல் சட்ட மீறல்களையும் அவை எந்தக் கட்சியினால் அல்லது வேட்பாளரினால் மேற்கொள்ளப்பட்டது என்பதைக் கருதாமல், கூர்ந்து அவதானித்து பதிவு செய்வார்கள் என்பதைக் குறிக்கின்றது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சியொன்றின் செயற்படு உறுப்பினராக இருக்கின்ற ஒருவர், ப∴வ்ரல் இயக்கத்தினால் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்.

கண்காணிப்பு நடவடிக்கைகள் மிகவும் வெளிப்படைத் தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும். கண்காணிப்பாளர்கள் தம்மை வாக்காளர்களுக்கும் போட்டியிடும் கட்சிகளுக்கும் இனங்காட்டிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தமது பேச்சினாலும் நடவடிக்கையினாலும் தாம் பக்கச்சார்பற்ற தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதையும் அது ஜனநாயக வழிமுறையைப் பாதுகாப்பதற்கும் மக்களின் நன்மைக்காகவுமே மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



கண்காணிப்பாளர்களின் அறிக்கைகள் மிகவும் திருத்தமானவையாகவும் அவர்களின் சொந்த அவதானிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.

இக் கைந்நூலில் பெட்டி 1 இல் உள்ள உறுதிமொழியை கண்காணிப்பாளர்கள் எல்லோரும் உறுதிமொழி எடுக்குமாறு கேட்கப்படுவர். கண்காணிப்பாளர்களை அடையாளப்படுத்திக்கொள்ள ஒரு விசேட அடையாள அட்டை வழங்கப்படும்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய ப.்.வ்ரல் நடத்தைமுறைக் கோவை பெட்டி 2 இல் இலகுவாகப் பார்த்துக்கொள்வதற்காக தரப்பட்டுள்ளது. கடமையின்போது கண்காணிப்பாளர்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய பிரதான கொள்கைகளை உறுதிமொழியும் நடத்தைமுறைக் கோவையும் கொண்டிருக்கின்றன. அடுத்துவரும் பந்திகளில் அவை மிக குறிப்பாக விபரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கண்காணிப்பாளர்களின் உறுதிமொழி

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (ſயுகுகுசுநுடு)

.................................................................................................................................. இல் வசிக்கும்

..................................................................................................................................... ஆகிய நான்,

பின்வரும் உறுதிமொழியைப் பகன்று இத்தால் வெளிப்படுத்துவதாவது:

☐ ........................................ ஆம் ஆண்டில் நடைபெறும் ..........................................................
தேர்தலிலும் வேறு வாக்கெடுப்புகளின்போதும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டினால் ஒழுங்கு செய்யப்படும் கண்காணிப்புப் பணிகளில் வாக்களிப்பு நிலைய நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவராக தபால்மூல வாக்களிப்பு கண்காணிப்பாளர் ஒருவராக பிரதேச சர்வ கட்சி நடவடிக்கைக் கூட கண்காணிப்பாளர் ஒருவராக செயலாற்றுவதற்கு உடன்படுகின்றேன்.

☐ நான் இத்தேர்தலில் போட்டியிடும் எந்தவோர் அரசியல் கட்சி சுயேட்சைக் குழுவின் செயற்பாட்டாளர் ஒருவரோ வேட்பாளர் ஒருவரோ அல்ல.

☐ நான் தேர்தல் கண்காணிப்பு பற்றிய பயிற்சி அமர்வொன்றில் கலந்துகொண்டு கண்காணிப்பாளர் ஒருவரின் பொறுப்பை நன்கு புரிந்துகொண்டுள்ளேன்.

☐ சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டினால் எனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை பக்கச்சார்பின்றியும் விடயத்தோடு இணைந்ததாகவும் எனது உயர்ந்தபட்ச ஆற்றலை ஈடுபடுத்தி நிறைவேற்றுவேன்.

☐ என்னால் வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் முன்வைக்கப்படும் அறிக்கைகள் எனது அவதானிப்புகளின்படி திருத்தமானவையாக இருப்பதில் நான் பொறுப்புக் கூறுவேன்.

☐ சுதந்திரமான கண்காணிப்பாளராக இயங்குவதற்கான என்னுடைய கடமைகள் சம்பந்தமாக எனக்கு வழங்கப்பட்ட எந்தவொரு அறிவுறுத்தலையேனும் நான் மீறினால் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினராகவுள்ள எனது சேவையானது பெப்ரல் இயக்கத்தினால் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படும் என்பதை அறிந்து நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கின்றேன்.

☐ பக்கச்சார்பாக இயங்கியமை குறித்து தெளிவான, பாரதூரமான குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்படுமாக இருப்பின், மேற்போன்ற இயக்கத்தினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் சிபார்சின் மூலம் எனது கண்காணிப்பை இரத்துச் செய்வதற்கு ப..்வ்ரல் இயக்கத்திற்கு உரிமை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

நீங்கள் கண்காணிக்கும் வாக்களிப்பு நிலையத்தின் பெயரும் இலக்கம்: ........................................
...............................................................................................................................

........................................................................................ ........................................................

தேர்தல் கண்காணிப்பாளரின் கையொப்பமும் திகதி

தேசிய அடையாள அட்டை இலக்கமும்

..........................................................................

பிரதேச அமைப்பாளரின் கையொப்பமும்

பதவி இலச்சினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காணிப்பாளர்கள் செய்யத் தகாதவை

☐ அரசியல் கட்சிகளுக்குரிய குறியீடுகளுடைய ஏதேனும் ஆடைகளை அணிதல் அல்லது வேறு அடையாளங்களைப் பாவித்தல்.

☐ தேர்தல் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட எந்தவோர் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்களிடமிருந்து அல்லது குழுவொன்றிடமிருந்து பரிசுப் பொருட்கள், உதவிகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளல்.

☐ யாதேனும் ஓர் அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் செயலாற்றும்போது பாரபட்சம் காண்பித்தல்.

☐ யாதேனும் ஓர் அரசியல் கட்சியுடன் அல்லது வேட்பாளருடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிர்ப்போ ஆதரவோ பாராட்டுதல் அல்லது யாதேனும் ஓர் அரசியல் கட்சி அல்லது தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்.

☐ ஏதாவது விழாவில் அல்லது நிகழ்ச்சியில் பங்குபற்றுவதன் மூலம் குறிப்பிட்ட ஒரு வேட்பாளர், கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் ஆதரவாளர் போன்ற ஒரு தோற்றம் ஏற்பட வழிவகுத்தல்.

☐ தேர்தல் உத்தியோகத்தர்கள், தேர்தல் செயற்பாட்டாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் முறுகலை ஏற்படுத்திக்கொள்ளல்.

☐ தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் மீறிச் செயற்படுதல்.

☐ சிரமமான அல்லது அபாயகரமான நிலையொன்றில், அவசியமற்ற துணிகரமான நடவடிக்கைகளை எடுத்தல்.

☐ நாட்டின் இன, மத அல்லது நாட்டின் பிற குழுத் தொடர்புகள் சம்பந்தமாக தனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவித்தல்.

☐ தேர்தல் முடிவுகளைப் பகுத்தாராய்தல் அல்லது ஊகம் வெளியிடுதல்.

☐ தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தும் விதத்தில் குறிப்பாக, தேர்தல் உத்தியோகத்தர்கள் வாக்காளர்களுடன் வாக்களிப்பு நிலைய முகவர்களுடன் அல்லது வாக்காளர்களுடன் கதைத்தல்.

## கண்காணிப்பாளர்கள் செய்யக்கூடியவை

☐ எந்த நேரத்திலும் விழிப்புடன் செயலாற்றுதலும் தமது கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு அவசியமான சகல செயன்முறைகளையும் பின்பற்றுதலும்.

☐ சரியான நேரத்தில் அவதானிப்பு நிலையத்தில் சமுகமாகி இருத்தல்.

(வாக்களிப்பு நிலைய நிலைகொள் கண்காணிப்பாளர் தேர்தலுக்கு முந்திய தினம் மாலையும் தேர்தல் தினத்தன்றும் குறித்த நேரத்திலும், நடமாடும் கண்காணிப்பாளர்கள் குறித்த நேரத்திலும் சமுகமாகி இருத்தல்)

☐ தேர்தல் சட்டங்களை மீறும், தகாத நடவடிக்கைகளையிட்டு விழிப்புடன் இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☐ தேர்தல் சட்டங்கள் நபரை நோக்காமல், பக்கச்சார்பின்றியும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறும் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைப் பரீட்சிப்பவர்களாகவும் அறிக்கையிடுபவர்களாகவும் செயலாற்றுதல்.
- ☐ தேவையான ஆவணங்களை அதாவது, தேசிய அடையாள அட்டை, ப'்வ்ரல் அடையாள அட்டை, கண்காணிப்பு அறிக்கைப் படிவம், சரிபார்த்தல், குறிப்புப் பத்திரம், புத்தகங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்லல்.
- ☐ உண்மையான விடயங்களை மாத்திரம் பதிந்துகொள்ளலும் சுயமாக தீர்ப்புச் செய்யாமல் இருத்தலும்.
- ☐ தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளைப் பதிவுசெய்தலும் அவை குறித்த தமது சொந்த அவதானிப்புகளை வேறாக குறித்துக் கொள்ளலும்.
- ☐ அறிக்கையிடும் படிவங்களிலும் சரிபார்த்தல் குறிப்புப் பத்திரங்களிலும் காணப்படும் அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றுதல்.
- ☐ கண்காணிப்புப் பணிகள் பூர்த்தியடைந்ததும் குறித்த அறிக்கைகளை மாவட்ட ஒருங்கிணைப்புப் பிரிவிடம் கையளித்தல்.
- ☐ (நடமாடும் கண்காணிப்பாளர்களின் விடயத்தில்) அவர்கள் ஒரு குழுவாகச் செயற்படுவதுடன், கலந்துரையாடிய பின் முடிவுகளுக்கும் தீர்மானங்களுக்கும் வருதல்.
- ☐ (நிலைகொள் கண்காணிப்பாளர்கள்) தமது பங்காளியுடன் அவதானிப்பில் ஈடுபடும் வாக்காளர்களுடனும் மிக நெருக்கமாகப் பணியாற்றுதல்.
- ☐ தேர்தல் சட்டத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு சம்பவத்தையும் செயலையும் தொடர்ந்தும் விழிப்புடன் இருந்து அவதானித்து குறித்துக்கொள்ளல்.

பெட்டி இல. 02

## தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான ப'்வ்ரல் இயக்கத்தின் நடத்தைமுறைக் கோவை

தேர்தல் கண்காணிப்பாளர்கள் பின்வருமாறு உடன்பாடு தெரிவிக்கின்றனர்:

- ☐ தேர்தலைக் கண்காணிக்கும்பொழுதும் அது தொடர்பாக அறிக்கையிடும்போதும் அதிகபட்ச நேர்மை, நடுவுநிலைமை என்பவற்றைக் கடைப்பிடிப்போம்.

  தேர்தல் வன்முறை மற்றும் நேர்மையற்ற தகாத நடவடிக்கைகளைத் தடுக்குமுகமாக மக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதுடன், சமூகப் பங்களிப்பை அதிகரிப்போம்.
- ☐ தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் ஆகியோரின் செயற்பாட்டை எவ்வித பக்கச்சார்பான நோக்கமுமின்றி கண்காணிப்போம்.
- ☐ சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அவசியமானவாறு போட்டியிடும் அரசியல் கட்சிகள், குழுக்கள் என்பவற்றுக்கு இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாக்காளர்கள் தமது வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் வாக்கை சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கும் சகல வழிகளிலும் உதவுவோம்.
- தாம் அவதானித்த அனைத்து சட்ட மீறல்களும் குறித்து தவறாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிப்பதுடன், அம்முறைப்பாடுகள் தொடர்பில் அவசிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும் கண்காணிப்போம்.
- எமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள், தகவல்களின் உண்மைநிலை குறித்து தீர ஆராய்வதுடன், தேர்தல் மோசடிகள், வன்செயல்கள் தொடர்பாக தாமதமின்றி ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிப்போம்.

## தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

ப.்.வ்ரல் இயக்கமானது தேர்தல் தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் தொடக்கம் இடம்பெறும் சகல தேர்தல் பிரசாரங்களையும் கண்காணிக்கும். போட்டியிடும் சகல அரசியல் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் என்போர் தத்தமது தேர்தல் பிரதேசங்களில் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் பிரசாரம் செய்யவும் இடையூறுகள் இன்றி தமது தேர்தல் நிகழ்ச்சி நிரல் பற்றி மக்களை அறிவுறுத்தவும் ஏற்ற சூழ்நிலை நிலவுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக இக்கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

ப.்.வ்ரல் இயக்கத்தினால் தேர்தல் பிரசார காலத்தில் வெளியிடப்படும் நிலைவர அறிக்கையை (Situation Report) தயாரிப்பதற்கு இந்த அறிக்கைகள் உதவும். இந்த அறிக்கையானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

## தேர்தல் வன்செயல்கள்

தேர்தல் அசம்பாவிதங்கள் பற்றிய அறிக்கைகள் தேர்தலில் போட்டியிடும் அமைப்புகளிடமிருந்தும் தமது கூட்டு அமைப்புகளிடமிருந்தும் மட்டுமன்றி, வாக்காளர்கள் மற்றும் அக்கறையுடைய பிரஜைகளிடமிருந்தும் ப.்.வ்ரல் இயக்கத்திற்கு நாளாந்தம் கிடைக்கும். இவ்வறிக்கைகள் மாவட்ட அலுவலகங்களுக்கும் ப.்.வ்ரல் இயக்கத்தின் தலைமை அலுவலகத்திற்கும் கிடைக்கும்.

சிறு முறுகல்கள், கருத்து முரண்பாடுகள், வாய்த் தர்க்கம் தொடக்கம் பாரதூரமான தாக்குதல்கள், கொலைச் சம்பவங்கள் வரை இம்முறைப்பாடுகளில் காணப்படும். அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது போட்டியாளர்களுக்கு எதிராக முடிந்த வரை அதிகளவு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவே முற்படுவர். ஆகையால், ப.்.வ்ரல் இயக்கம் இயலுமானவரை உண்மையான முறைப்பாடுகளை மாத்திரம் ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஒரு ஒழுங்குமுறையைப் பின்பற்றுகிறது. அதன்படி, அடிப்படையில் முறைப்பாடு செய்யும் தனி நபரோ அல்லது அரசியல் கட்சிகளோ அல்லது கட்சி வேட்பாளரோ தனது முறைப்பாட்டை எழுத்தில் தருமாறு வேண்டப்படுகிறார். இது, பின்னர் மாவட்ட இணைப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் உண்மைத்தன்மை உறுதி செய்யப்படும். குறித்த சம்பவம் சிறிய அளவிலான குற்றமா அல்லது பாரதூரமான ஒரு குற்றமா என்பது வகைப்படுத்தப்படும். கொலைகளும், ஆட்களுக்கு பாரிய காயமேற்படுத்தலும் சொத்துக்களைச் சேதப்படுத்தலும் தீ வைத்தலும் கொள்ளையிடுதலும் போட்டிக் குழுவொன்றின் சட்டபூர்வமான தேர்தல் பிரசாரத்தைக் குழப்பும் நோக்குடன் அதிகாரத்தைப் பிரயோகித்தலும் பாரதூரமான குற்றங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவரொட்டிகளையும் பதாகைகளையும் கட்-அவுட்களையும் காட்சிப்படுத்தல்

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் சுவரொட்டிகள், கொடிகள், பதாகைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துவது குற்றமாகும். இதனால் தேர்தல் அறிவிப்புச்செய்யப்பட்ட பின் வேட்பாளர்கள் தாம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய முன்பதாக சுவரொட்டிகள், பதாகைகள், கட்-அவுட்கள் என்பவற்றை காட்சிப்படுத்துகின்றனர். எவ்வாறாயினும், பதாகைகள், சுவரொட்டிகள் தொடர்பான சட்டம் எல்லா அரசியல் கட்சிகளாலும் மீறப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் நடந்து கொள்ளும் விதம், எவ்வளவு தூரத்திற்கு அவை இதை மீறி நடக்கின்றன, சட்டவிரோதமான இக்காட்சிப் பொருட்களையிட்டு பொலிஸார் என்ன நடவடிக்கை எடுக்கின்றனர் என்பதை அவதானித்து கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட வேண்டும். இச்சட்டத்தை எந்தளவு தூரம் மீறி நடக்கின்றனர் என்பதானது அவ்வாறு மீறுவது ஒரு தனி அரசியல் கட்சியாக இருப்பினும் சரி அல்லது வேட்பாளர் ஒருவராயினும் சரி அவர்களின் பொதுவான தேர்தல் நடத்தையும் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் எவ்வாறான தேர்தல் நிலைமை நிலவுகின்றது என்பதையும் பிரதிபலிப்பதாக அமையும். அதன்படி, அடிப்படையில் அரசியல் கட்சிகளும் தேர்தல் வேட்பாளர்களும் மக்களும் செய்யும் முறைப்பாடுகளை எழுத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.



## ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும்

(அ) யாதேனும் ஒரு கட்சி சட்டவிரோதமான ஊர்வலங்களை அல்லது ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதா அல்லது நடாத்த முயற்சித்ததா,

(ஆ). போட்டியிடும் சகல கட்சிகளும் குறிப்பிடத்தக்க தங்குதடைகள், இடையூறுகள் இன்றி தமது பொதுக் கூட்டங்களை நடாத்தும் வாய்ப்பு உள்ளதா

என்ற விடயங்கள் தொடர்பாக கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட வேண்டும்.

## பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல்

கட்சிகளும் வேட்பாளர்களும் சட்டத்தை மீறாமல் செய்யக்கூடிய ஏராளமான செயற்பாடுகள் உள்ளன. அவை சட்டவிரோத செயல்களாகக் கருதப்படாவிட்டாலும் முறையற்ற செயல்களாகவும் தேர்தல் செயன்முறையின் தரத்தை நலிவடையச் செய்வனவாகவும் கருதப்படும்.

ஆளுங் கட்சி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரத்தை நடாத்தும் சந்தர்ப்பங்களையிட்டு கண்காணிப்பாளர்கள் குறிப்பாக விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஆளுங் கட்சி, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரத்திற்கு முறைகேடான விதத்தில் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வதை பொதுவாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பிரசாரத்திற்கு அரச வாகனங்களைப் பாவிப்பதும் அரசாங்க உத்தியோகத்தர்களை பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும் அடிக்கடி நடைபெறுகின்றன. இவ்வாறு அரச அதிகாரத்தையும் பொதுச் சொத்துக்களையும் அரசாங்க ஊழியர்களையும் பயன்படுத்துவது முறையற்றதாகவும் நடைமுறை சட்டத்தை மீறுவதாகவும் உள்ளது. அரச கருத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தல் அன்றேல் அமைச்சர்கள் மேற்கொள்ளும் உத்தியோகபூர்வ விஜயங்கள் என்பவற்றை தேர்தல் பிரசார நோக்கில் பயன்படுத்துவதும் ஆளுங் கட்சியினர் செய்யும் தகாத நடவடிக்கைகளாகும். இவற்றையும் கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பு சாதனங்கள்

ப.்.வ்ரல் இயக்கமானது தேசிய மட்டத்தில் தேர்தல் பிரசாரங்களில் அரச தொடர்பு சாதனங்களின் பாவனை, தனியார் தொடர்பு சாதனங்களின் நடத்தை என்பவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு குழுவை அமைக்கும். பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களில் அரசாங்க தொலைக்காட்சி, வானொலிச் சேவைகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்

தேர்தல் பிரசாரத்தின் போதும் தேர்தல் நடைபெறும் தினத்தன்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகள் குறித்து பொலிஸாருக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் எவை என்பது குறித்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.



முறைப்பாடுகளை ஏற்று அவை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான செயன்முறை முறையாகவும் பாகுபாடற்ற வகையிலும் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை கண்காணிப்பாளர் அவதானித்து அறிக்கையிட வேண்டும்.

குற்றவாளிகள் சார்பில் தலையிடுதல், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இடமாற்றம் செய்தல் போன்ற அரசியல் தலையீடுகள் ஏதும் காணப்படுமாயின், கண்காணிப்பாளர்கள் அவற்றை அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

### சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலைப் பாதிக்கும் பிற காரணிகள்

பின்வரும் விடயங்கள் தொடர்பில் கண்காணிப்பாளர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும்:

- திட்டமிட்ட ஆள் மாறாட்ட முயற்சியில் ஈடுபடுவதற்கு ஆயத்தங்களைச் செய்யும் ஏதாவது ஒரு அரசியல் கட்சி பற்றிய முறைப்பாடு.
- வாக்காளர்களிடமிருந்து வாக்காளர் அட்டைகள் பலவந்தமாகப் பறிக்கப்படும் சந்தர்ப்பங்கள்.
- ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் பயமுறுத்தப்படல்.

இவ்வாறான நிலைமைகள் குறித்த அறிக்கையொன்றை தேர்தல் முடிவடைந்ததும் அதே தினத்தில் தேர்தல் பிராந்திய அலுவலகத்தில் கையளிக்க வேண்டும்.

## அதிகாரிகளுடனும் கட்சி அமைப்பாளர்களுடனும் தொடர்புகளைப் பேணுதல்

மாவட்ட தேர்தல் அலுவலகத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் கட்சிப் பிரதிநிதிகளுடனான கூட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் சமுகமளிக்க வேண்டும். அவற்றில் முன் வைக்கப்படும் முறைப்பாடுகளையும் அவை தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களையும் குறித்துக்கொள்ள வேண்டும். இக்கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகக் கலந்து கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து பெவ்ரல் இயக்கத்தினால் தமது பிரதிநிதிகளுக்கு உரிய அனுமதி பெற்றுத் தரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட மட்டத்திலுள்ள கண்காணிப்பாளர்கள் அனைத்துக் கட்சிகளின் அலுவலகங்களுக்கும் விஜயம் செய்ய வேண்டும். அத்துடன், அவர்களின் முறைப்பாடுகள் இருப்பின் அடிக்கடி அவற்றைப் பெற்று அறிக்கையிட வேண்டும்.

வாக்கெடுப்பு முந்திய தினத்தில் மாவட்ட இணைப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் மாவட்டத்தின் சகல வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் சென்று, வாக்கெடுப்புக்கான ஆயத்தங்கள் முறையாகச் செய்யப்படுகின்றனவா என்பதையும் சுதந்திரமான, நீதியான தேர்தலொன்று நடைபெறுவதற்குரிய சூழ்நிலை நிலவுகின்றதா என்பதையும் கண்டறிய வேண்டும்.

## வாக்கெடுப்பைக் கண்காணித்தல்

## கண்காணிப்பதற்கு ஆயத்தமாதல்

கண்காணிப்பாளர் ஒருவராக பெயர் குறிப்பிடப்படும் சகலரும் தேர்தலுக்கு முன்னர் நடாத்தப்படும் □கண்காணிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிச் செயலமர்வுகளில்□ கலந்துகொண்டு தேர்தல் கண்காணிப்பு குறித்த முறையான பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ப.்.வ்ரல் இயக்கத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய தேர்தல் தினத்தில் கண்காணிப்புப் பணியை மேற்கொள்வதற்கு அவசியமான ஆயத்தங்களைச் செய்வதற்கு மாவட்ட இணைப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

நடமாடும் கண்காணிப்புக் குழு வாக்களிப்பு நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள நிலைகொள் கண்காணிப்பாளர்கள் தபால் வாக்களிப்பு கண்காணிப்பாளர்கள், பிரதே சர்வ கட்சி நடவடிக்கைக் கூட கண்காணிப்பாளர்கள் ஆகிய கண்காணிப்பாளர்களை அறிமுகப்படுத்திக்கொள்வது அவரது பொறுப்பாகும்.

மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களினதும் பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களினதும் ஒரு பொறுப்பு யாதெனில், குறித்த மாவட்டத்திலுள்ள சகல நிலையங்களையும் உள்ளடக்குகின்றவாறு ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு ஆளொருவர் வீதம் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்துவதாகும். அவ்வாறு நியமிக்கப்படும் கண்காணிப்பாளர்களின் பெயர்ப் பட்டியல்கள் தேர்தலுக்கு 3 வாரங்களுக்கு முன்னர் ப.்.வ்ரல் இயக்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும்.

## நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள்

நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள் பின்வரும் இடங்களில் நிலவும் நிலைமைகள் குறித்து அவதானிப்பதில் ஈடுபட வேண்டும்.

1. வாக்களிப்பு நிலையத்தை அண்டிய பிரதேசம்
2. நடமாடும் கண்காணிப்புக்குள் அடங்கும் பிரதேசங்கள்
3. அவ்வாறு நடமாடும் கண்காணிப்பில் ஈடுபடும் வேளையில் உங்கள் கவனத்தை ஈர்க்கும் விசேட சம்பவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும், தாம் அவதானித்த குறிப்பாக சம்பவங்கள், நடவடிக்கைகள் என்பவற்றையே கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட வேண்டும். மாறாக, பொதுவான அபிப்பிராயங்களை அறிக்கையில் உட்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு உதவுமுகமாக, கண்காணிப்பாளர்களுக்குச் சில படிவங்கள் தரப்படும். இவை தேர்தலின்போது பொதுவாக நிகழக்கூடிய தேர்தல் முறைகேடுகள் குறித்து அறிக்கையிடுவதை இலகுபடுத்துவதற்காக விபரிக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட படிவங்களாகும்.

மேலே இல. 1, 2 ஆகியவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கண்காணிப்புகள் குறித்த அறிக்கைகளை தேர்தல் நடைபெறும் தினத்தன்று பி.ப. 4.00 மணிக்குப் பின்பு 2 மணித்தியாலங்களுக்குள் காண்பிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு குறித்த அறிக்கைகளை உடனடியாக பெக்ஸ் மூலம் பெ∴வ்ரல் இயக்கத்தின் நடவடிக்கை மத்தியநிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கண்காணிப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்போது அறிக்கை எழுதுவதைப் பற்றிய விரிவான விளக்கங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## வாக்களிப்பு நிலையங்களில் இருக்கும் நிலைகொள் கண்காணிப்பாளர்கள்



கண்காணிப்பிற்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு நிலைகொள் கண்காணிப்பாளர் வீதம் ப∴வ்ரல் இயக்கத்தினால் நியமிக்கப்படுவர். (இவ் எண்ணிக்கை தேர்தலுக்குத் தேர்தல் மாற்றமடையலாம்) வாக்கெடுப்பு ஆரம்பிக்க முன்பு நிலைகொள் கண்காணிப்பாளர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்:

- ☐ தேர்தல் நடைபெறும் தினத்திற்கு முன்னைய தினம் மாலை 4.00 - 5.00 மணிக்கு இடையில் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் தாம் கண்காணிப்பாளர்கள் என்பதைத் தெரிவித்து தமது அடையாள அட்டை, நியமனக் கடிதம் என்பவற்றைக் காண்பித்து தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- ☐ தேர்தல் தினத்தன்று குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்திற்கு காலை 07.00 மணிக்கு முன்பதாக சமுகமாகி இருக்க வேண்டும்.

வாக்களிப்பு நிலைய நிலைகொள் கண்காணிப்பாளர் தமது அறிக்கைகளை ப∴வ்ரல் இயக்கத்தினால் வழங்கப்படும் படிவத்திலேயே அறிக்கையிட வேண்டும்.

இவ்வறிக்கையின் வடிவம் நடமாடும் கண்காணிப்பாளர்களின் அறிக்கையை விட சற்று வித்தியாசப்படும். ஏனெனில், நிலைகொள் கண்காணிப்பாளர்கள், நடமாடும் கண்காணிப்பாளர்களைப் போலன்றி, தேர்தல் நாள் முழுவதும் ஒரு வாக்களிப்பு நிலையத்திலிருந்தே தமது தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்வர். அவர்கள் வாக்களிப்பு நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளையும் வாக்களிப்பு நிலையத்திலுள்ள நிலைமையையுமே அவதானிப்பர். தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வாக்களிப்பு நிலைய தலைமை தாங்கும் உத்தியோகத்தரினால் வழங்கப்படும், தேர்தல்கள் ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிவத்தை நிரப்பி தேர்தல் முடிவடைந்ததும் மீண்டும் அதனை வாக்களிப்பு நிலைய தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும்.

## தபால்மூல தேர்தல் கண்காணிப்பாளர்கள்

தபால்மூல வாக்கெடுப்பை நடாத்துவது குறித்த இரண்டு தினங்களில் குறித்த வாக்களிப்பு நிலையங்களைக் கண்காணிப்பதற்கும் ப.்.வ்ரல் இயக்கத்தின் கண்காணிப்பாளர்களில் ஒருவர் வீதம் ஈடுபடுத்தப்படுவார். தபால்மூல வாக்களிப்பு நிலையங்களில் இணைக்கப்படும் கண்காணிப்பாளர்கள் தமது அறிக்கைகளை ப.்.வ்ரல் இயக்கத்தினால் வழங்கப்படும் படிவங்களிலேயே வழங்க வேண்டும்.

## பிரதேச சர்வ கட்சி நடவடிக்கைக் கூடங்கள்

தேர்தல் கண்காணிப்புக்கு அண்மைக்காலத்தில் இணைந்த ஒரு முறைமையாகும். இது பிரதேச செயலகங்கள் ஊடாக தேர்தல் வன்செயல்கள் குறித்த மத்திய நிலையமொன்றாக இயங்கும். ப.்.வ்ரல் இயக்கத்தின் கண்காணிப்பாளர் ஒருவருடன் பிரதேச செயலாளரும் பொலிஸ் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரும் அவரது உத்தியோகத்தர் குழாமும், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களும் அரசியல் கட்சிகளின் அதிகாரம் பெற்ற முகவர்களும் இந்த நடவடிக்கை கூடத்தில் செயலாற்றுவர். தேர்தல் நடைபெறும் தினத்தன்று குறித்த பிரதேசத்திலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரிதமாகச் செயலாற்றுவர்.

## கண்காணிப்பாளர்கள் அறிந்திருக்க வேண்டியவையும் கண்காணிக்க வேண்டியவையும்



தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது கடமையை திறம்படச் செய்வதற்கு தேர்தல் சட்டதிட்டங்களும் ஒழுங்குகளும் பற்றிய அடிப்படை விளக்கத்தையும் அறிவையும் பெற்றிருப்பது அவசியமாகும். ப.்.வ்ரல் இயக்கத்தினால் வழங்கப்படும் பயிற்சி அமர்வுகளில் கலந்து கொள்வதுடன், கண்காணிப்பின்போது உதவுவதற்காக தமக்கு வழங்கப்படும் ஆவணங்கள் அடங்கிய தொகுதியை முற்றாக பயன்படுத்த வேண்டும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைபெறுவதற்கு ஊறுவிளைவிக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளில் வழமையான குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் குற்றச்செயல்களும், தேர்தல் சட்டத்தின் கீழ் வரும் குற்றச்செயல்களும் அடங்கும்.

பொதுவாக தேர்தல் நாளன்று அடிக்கடி இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் சில பெட்டி - 3 இல் தரப்பட்டுள்ளன. இவற்றையிட்டு கண்காணிப்பாளர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

தேர்தல் சட்ட மீறல்கள் மூன்று (3) வகைப்படும். அவையாவன:

1. தேர்தல் குற்றங்கள்

2. ஊழல் பழக்கங்கள்

3. சட்டவிரோத நடவடிக்கைகள்

ப.்.வ்ரலினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேர்தல் சட்டங்கள் - குற்றங்களும் தண்டனைகளும் எனும் கையேட்டில் தேர்தல் சட்டமீறல்கள் பற்றிய விடயங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக அறிந்து கொள்ளும் பொருட்டு சில தேர்தல் குற்றங்கள் கீழ் தரப்பட்டுள்ளன:

- ☐ நியமனப் பத்திரங்களை போலியாகப் புனைதல்.
- ☐ வாக்குச்சீட்டுகளை விற்றல், வாங்குதல்.
- ☐ அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டை காண்பித்தல்.
- ☐ வாக்குச்சீட்டைத் தவிர வேறு எதையும் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இடுதல்.
- ☐ வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே வாக்குச்சீட்டுகளைக் கொண்டுசெல்லல்.
- ☐ வாக்குச்சீட்டுகளை அழித்தல்.
- ☐ தபால் மூலம் வாக்களிக்கும்போது அதிகாரமற்ற ஒருவர் தபால் மூல வாக்கு உறையொன்றைத் திறந்து பார்த்தல், அழித்தல் முறைகேடாக கையாளல்.
- ☐ வாக்களிப்பின்போது வாக்காளர் ஒருவரை தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் ஒரு சின்னம் அது போன்ற ஒன்றை வைத்திருத்தல்.
- ☐ வேட்பாளர் ஒருவரின் தேர்தல் சின்னமொன்றை உருவழித்தல்.
- ☐ வாக்களிக்கும் உரிமையற்ற ஒருவர் அது பற்றி அறிந்த நிலையில் வாக்களித்தல்.
- ☐ பிரஜாவுரிமையை இழந்த ஒருவர் தேர்தல் நடவடிக்கைகளிலும் பிரசாரத்திலும் ஈடுபடுதல்.
- ☐ தகாத செல்வாக்கு, அதிகாரத்தைப் பிரயோகித்தல், நேரடியாகவோ மறை முகமாகவோ அச்சுறுத்துதல்.
- ☐ உரிய அதிகாரமின்றி வாக்காளர் அட்டைகளை அச்சிடுதல்.
- ☐ உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை போன்று தோற்றமளிக்கும் ஏதேனுமொன்றை அச்சிடுதல்.
- ☐ அச்சிடுபவர், பதிப்பாளர் ஆகியோரின் பெயர், முகவரி இன்றி பிரசார வெளியீடுகளை அச்சிட்டு வெளியிடுதல்.

**பெட்டி இல. 03**

தேர்தல் நடைபெறும் தினத்தன்று இடம்பெறக்கூடிய குற்றங்கள்

- ☐ வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்காமல் இருக்குமாறு ஒருவரிடம் வேண்டுதல்.
- ☐ பிரசார சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் காட்சிப்படுத்தல்.
- ☐ வாக்குச்சாவடிக்கு அருகில் ஒலிபெருக்கிக் கருவிகளைப் பாவித்தல்.
- ☐ வாக்குச் சாவடிக்கு அருகில் தகாத நடத்தைகளில் ஈடுபடுதல்.
- ☐ வாக்காளர்களைப் பயமுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ வாக்களிப்பு நிலையத்தினுள் அனுமதியின்றி அல்லது சட்டவிரோதமான முறையில் பிரவேசித்தல்.

☐ தேர்தல் ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தல்.

☐ பொதுக் கூட்டங்களை நடாத்துதல்.

☐ மேற்குறிப்பிட்ட குற்றச்செயல்களைப் புரிவதற்கு முயற்சித்தல்.

☐ ஒரு வேட்பாளருக்கு ஒரு தேர்தல் அலுவலகத்தைத் தவிர பல அலுவலகங்களைத் திறத்தல்.

☐ வாகனங்களில் பதாகைகள், கொடிகள், அறிவித்தல் போன்றவற்றைக் காட்சிப்படுத்தல்.

☐ வேட்பாளரின் குடும்பத்தவர்கள், வாக்காளர்களை தம் பக்கம் திருப்பிக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

☐ வாக்களிக்கும்போது இரகசியம் பேணாமை.

☐ ஆள்மாறாட்டம் செய்தல்.

☐ வாக்களிப்பதைத் தூண்டுவதற்கு அல்லது வாக்களிக்காமல் இருப்பதைத் தூண்டுவதற்கு உணவு, குடிபானங்கள் கொடுத்து உபசரித்தல், பணம் கொடுத்தல்.

☐ வாக்காளர்களின் போக்குவரத்தை ஒழுங்குசெய்தல் அல்லது போக்குவரத்துக்குப் பணம் கொடுத்தல்.

☐ வேட்பாளர் ஒருவர் கட்டணம் செலுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஆட்களை ஈடுபடுத்தல்.

## வாக்கெடுப்புக்கும் வாக்குகள் எண்ணுவதற்கும் தாக்கம் செலுத்தக்கூடிய பிரச்சினைகளும் தகாத செயல்களும் - தெரிவுசெய்யப்பட்டவை சில

☐ சீரற்ற தேருநர் இடாப்பு.

☐ தேர்தல் உத்தியோகத்தர்களினால் தன்னிச்சையான முறையில் வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதிலிருந்து விலக்கப்படல்.

☐ தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் வாக்களிக்க அனுமதித்தல்.

☐ வாக்காளரின் அடையாளத்தை நிரூபிக்கப் போதிய ஆதாரமின்மை.

☐ வாக்காளரின் அடையாளம் பற்றி சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு உரிய அக்கறை காட்டாமை.

☐ அழிக்க முடியாத மையினால் வாக்காளரின் விரலில் அடையாளமிடப்படாமல் வாக்குச்சீட்டு வழங்கப்படுதல்.

☐ விரலில் மை அடையாளமுள்ள வாக்காளர் ஒருவர் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படல்.

☐ விரலில் பூசப்படும் மை இலகுவில் அழியக்கூயதாக இருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ ஒருவர் ஒரு தடவையில் பல வாக்குகளை அளித்தல்.

☐ அதிகாரமற்ற ஒருவர் தேர்தல் அதிகாரியைப் போல் பாவனை செய்தல்.

☐ வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்ற போதியளவு தேர்தல் உத்தியோகத்தர்கள் இல்லாத நிலைமை.

☐ வாக்களிப்பு நிலையம் மக்கள் அறிந்த, இலகுவில் வரக்கூடிய வகையில் அமைக்கப்படாமை.

☐ வாக்களிப்பதைத் தடுக்குமுகமாக உரிய நேரத்திற்கு முன்பே வாக்கெடுப்பை இடைநிறுத்துதல்.

☐ வாக்களிப்பு ஆயத்தங்களை வேண்டுமென்றே தாமதப்படுத்தல்.

☐ ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இன்றி வாக்களிப்பை இரத்துச்செய்தல் அல்லது இடைநிறுத்துதல்.

☐ தேர்தல் உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றோ அல்லது தவறாகவோ வாக்குச்சீட்டுகளுக்கு அதிகாரபூர்வ முத்திரையிடாமல் அல்லது துளையிடாமல் கொடுத்தல்.

☐ பிரசார சாதனங்கள் அல்லது பிரசார ஏடுகள் வாக்களிப்பு நிலையத்திற்குள் அல்லது அதற்கு அருகில் தென்படுதல்.

☐ வாக்களிப்பு நிலையத்திற்கு மிக அருகாமையில் அல்லது வாக்களிப்பு நிலையத்திற்குள் பிரசாரம் செய்தல்.

☐ வாக்குகளை பணம் கொடுத்து வாங்குதல் அல்லது வாக்களிக்க வேண்டாமெனத் தூண்டி வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுத்தல்.

☐ வாக்களிப்பு நிலையத்தினுள் அல்லது அதற்கு வெளியிலுள்ள கண்காணிப்பாளர்கள் அல்லது வாக்காளர்களைப் பயமுறுத்தல்.

☐ உத்தியோகபூர்வ தேர்தல் பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்களையும் அழித்தல், தொலைத்தல், மாற்றி வைத்தல் அல்லது களவு செய்தல்.

☐ வாக்களிக்கும்போது தேவையான அந்தரங்கம் வழங்கப்படாமை.

☐ பாவிக்கப்படாத வாக்குச்சீட்டுகளில் சட்டவிரோதமான முறையில் அடையாளமிட்டு, வாக்குச்சீட்டுப் பெட்டிக்குள் இடுதல்.

**பாரதூரமான சட்ட மீறல்களாவன:**

☐ வாக்களிப்பு நிலையத்தினுள் ஒரு கும்பலாக பலவந்தமான முறையில் நுழைதல்.

☐ வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் வாக்காளர்களை பகிரங்கமாக பயமுறுத்துதல்.

☐ வாக்காளர்கள் வாக்களிப்பதை தடுப்பதற்காக பலாத்காரத்தை பிரயோகித்தல் அல்லது பிரயோகிக்க முயற்சித்தல்.

☐ தேர்தல் முகவர்களை தமது கடமையை செய்யவிடாமல் வாக்களிப்பு நிலையத்திலிருந்து துரத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வாறான செயல்கள் காரணமாக மிகவும் பாரதூரமான முறையில் சட்ட மீறப்படுமிடத்து கண்காணிப்பாளர்கள் அவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடலாம்.**

**அவ்வாறான வேளைகளில், நடமாடும் கண்காணிப்பாளர்கள் -**

- ☐ அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு, நடமாடும் பொலிஸ் காவற்குழுவிற்கு அல்லது தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு எது அருகில் இருக்கிறதோ அதற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.
- ☐ அத்துடன், அது குறித்து மாவட்ட தேர்தல் கண்காணிப்பு இணைப்பாளருக்கும் அறிவிக்க வேண்டும். அவர் அதனை ப∴வ்ரல் தலைமை அலுவலகத்திற்கு பெக்ஸ் மூலம் அறிவிப்பார். இதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை ப∴வ்ரல் இயக்கம் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கும்.

**வாக்களிப்பு நிலைய நிலைகொள் கண்காணிப்பாளர்களாயின் -**

வாக்களிப்பு நிலைய நிலைகொள் கண்காணிப்பாளர்கள் தாமதமின்றி தமது முறைப்பாட்டை நடமாடும் பொலிஸ் காவல் குழுவினருக்கு அறிவிக்க வேண்டும்.

**சரியான நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுதல்**

- ☐ தேர்தல் உத்தியோகத்தர்கள் பின்பற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக நடமாடும் கண்காணிப்பாளர்களும் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருக்கும் கண்காணிப்பாளர்களும் அவதானமாக இருத்தல் வேண்டும். தேர்தல் நடைபெறும்போதும் வாக்குகளை எண்ணும்போதும் நடுநிலைமையை உறுதிப்படுத்தும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய பிரதான நடவடிக்கைமுறைகள் 4 ஆவது பெட்டியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

பெட்டி இல. 04

**வாக்களிப்பு நிலையமொன்றினுள் தேர்தல் உத்தியோகத்தர்கள் பின்பற்றி ஒழுக வேண்டிய நடைமுறைகள்**

- ☐ கடமையின் நிமித்தமன்றி எந்த ஒருவரும் வாக்காளர் ஒருவருடன் கதைக்க முடியாது.
- ☐ வாக்களிப்பு நிலையத்தினுள் நுழைவதற்கு அதிகாரமுடையவர்கள் மட்டுமே அங்கு அனுமதிக்கப்படலாம்.
- ☐ வாக்களிப்பு நிலைய முகவர்கள் முறைப்படி அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சை வேட்பாளர் குழுவின் அதிகாரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
- ☐ முறையான அதிகாரம் பெற்ற அறிவிப்பைத் தவிர வேறு சுவரொட்டிகள், நிழற்படங்கள், துண்டுப் பிரசுரங்கள், அறிவிப்புப் பலகைகள் என்பவற்றை வாக்களிப்பு நிலையத்தினுள் விநியோகிக்க அல்லது காட்சிப்படுத்த முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ ஒரு வாக்களிப்பு நிலையத்தினுள் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் இரண்டு வாக்களிப்பு நிலைய முகவர்கள் மாத்திரமே இருக்கலாம்.

☐ ஓர் அரசியல் கட்சி ஒரு சுயேட்சை வேட்பாளர் குழுவினால் வாக்களிப்பு நிலையமொன்றில் தங்கியிருக்க இரு தேர்தல் முகவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட வேண்டும்.

☐ காலை 07.00 மணிக்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்படும் நேரத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிக்க வேண்டும்.

☐ வாக்கெடுப்பு ஆரம்பிக்க முன்பதாக, வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு வெறுமையான வாக்குச்சீட்டுப் பெட்டிகள் திறந்து காட்டப்பட்டபின் மூடி முத்திரையிடப்பட வேண்டும்.

☐ தேர்தல் தலைமை தாங்கும் உத்தியோகத்தர் (SPO) வாக்குச்சீட்டுகள், உத்தியோகபூர்வ இலச்சினை, உத்தியோகபூர்வ குறியீடு மற்றும் தேருநர் இடாப்பின் பிரதிகள் என்பவற்றை வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு காட்ட வேண்டும்.

☐ வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் இலகுவில் அழியாத மை பூசப்பட வேண்டும்.

☐ வாக்காளரின் பெயரும் இலக்கமும் வாக்களிப்பு நிலைய முகவர்களுக்குக் கேட்கக்கூடியவாறு உரத்துக் கூறப்பட வேண்டும்.

☐ வாக்குச்சீட்டை வாக்காளருக்கு வழங்க முன்பு உத்தியோகபூர்வ இலச்சினை அல்லது துளை இடப்பட வேண்டும்.

☐ வாக்களிக்க முடியாதவாறு உடற் குறைபாடுள்ள ஒரு வாக்காளர் வாக்களிக்க வருவாராயின், ஒரு தேர்தல் உத்தியோகத்தரின் முன்னிலையில் மற்றொரு உத்தியோகத்தர் அவருக்கு உதவலாம்.

☐ பி.ப. 04.00 மணிக்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்படும் நேரத்தில் வாக்களிப்பு நிறுத்தப்பட வேண்டும்.

☐ வாக்குச்சீட்டுப் பெட்டிகள் மூடி முத்திரையிடப்படும்போது வாக்களிப்பு நிலைய முகவர்கள் பிரசன்னமாக இருக்க வேண்டும். விரும்பின் அவர்கள் தம்முடைய முத்திரையையும் பெட்டிகளில் இடலாம்.

☐ வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் தலைமை தாங்கும் உத்தியோகத்தர் பின்வருவனவற்றை தனித்தனியாக பொதியிட வேண்டும். அவையாவன:

1) தனித்தனியே ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியின் திறப்பும்.

2) பயன்படுத்தப்படாத மற்றும் பழுதடைந்த வாக்குச்சீட்டுகள்.

3) தேருநர் இடாப்பின் அடையாளமிடப்பட்ட பிரதிகளும் வாக்குச்சீட்டின் அடிக்கட்டைகளும் தேர்தல் சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்ட வாக்காளர்களின் பட்டியல், கேட்டுப்பெற்ற வாக்குச்சீட்டுகளின் பட்டியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு, சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தரினால் வாக்குச்சீட்டு கணக்கும் தயாரிக்கப்பட வேண்டும்.

## அனுமதி அளிக்கப்படுமாயின், வாக்குகளை எண்ணும் நிலையத்தில் கண்காணிப்பாளர் ஒருவர் அவதானிக்க வேண்டிய விடயங்கள்

- குறிப்பிட்ட வாக்கெண்ணும் நிலையத்திற்கு உரிய வாக்குச்சீட்டுப் பெட்டிகள் யாவும் நிலையத்திற்கு வந்தடைந்த பின்னரே வாக்குகள் எண்ணத் தொடங்க வேண்டும்.
- வாக்குச்சீட்டுப் பெட்டியிலுள்ள வாக்குச்சீட்டுகளை வெவ்வேறாக எண்ணி தொகை குறித்துக்கொள்ளப்பட்ட பின்னர், வாக்குச்சீட்டுகள் யாவும் நன்கு கலக்கப்பட வேண்டும்.
- அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர் குழுக்களின் வாக்குகள் எண்ணும் நிலைய முகவர்களும் மட்டுமே வாக்கெண்ணும் நிலையத்திற்குள் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.
- வாக்குகள் எண்ணத் தொடங்க முன்னர் வாக்குச்சீட்டுக் கணக்கை வாக்கெண்ணும் உத்தியோகத்தர் வாக்கெண்ணும் நிலைய முகவர்களுக்கு காண்பிக்க வேண்டும். அவர்கள் விரும்பின் அதனைப் பிரதி எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.
- வாக்குச்சீட்டுகளின் முன்பக்கம் எப்பொழுதும் மேலே இருக்கும்படியாக வைக்கப்பட வேண்டும். அதன் பின்புறம் அச்சிடப்பட்டுள்ள இலக்கத்தை எவராவது பார்த்துவிடுவதைத் தவிர்ப்பதற்கு தகுந்த முன்னெச்சரிக்கை எடுக்க வேண்டும்.
- தேர்தல் சட்டத்தின் பிரிவு 53 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரமே வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்படலாம்.
- குறிப்பிட்ட ஒரு வாக்கை ஏற்பதா, நிராகரிப்பதா எனும் குழப்பமான நிலைமை ஏற்பட்டால் அப்பொழுது வாக்கெண்ணும் நிலைய முகவர்களின் அபிப்பிராயத்தைப் பெற வேண்டும்.
- வாக்குகளை எண்ணி முடிந்ததும் வாக்கெண்ணும் உத்தியோகத்தர் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு பின்வருவனவற்றை முத்திரையிடப்பட்ட பொதிகளில் வைத்து அனுப்ப வேண்டும்:-

    1) எண்ணிய வாக்குச்சீட்டுகள்

    2) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள்.

    3) கேட்டுப்பெற்ற வாக்குச்சீட்டுகள்.

    4) தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள் நமது அறிக்கையை வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் இரண்டு மணித்தியாலங்களுக்குள் ப.்.வ்ரல் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும். அவ் அறிக்கைகளை தொலைநகல் மூலம் அனுப்பி வைப்பதற்குரிய ஆயத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ப.்.வ்ரலினால் குறிப்பிட்ட படிவத்தில் அறிக்கை எழுதப்பட்டிருக்க வேண்டும். பொழிப்பான இப்படிவமானது தேர்தலைக் கண்காணிக்கின்றபோதே நிரப்பக்கூடியவாறு இலகுவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்தல் கண்காணிப்பின்போது கவனமாகவும் தெளிவாகவும் இது நிரப்பப்படுமிடத்து மேலதிக தயாரிப்புகளின்றி அப்படிவத்தை அவ்வாறே தொலைநகல் மூலமல் அனுப்பிவைக்க முடியும்.

இவ்வறிக்கையில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்:

தேர்தல் கண்காணிக்கப்பட்ட மாவட்டமும் தேர்தல் பிரிவும், தேர்தல் பிரிவிலிருந்த வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, கண்காணிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, அவதானித்த சம்பவங்கள், கண்காணித்த வாக்களிப்பு நிலையங்களின் ஒட்டுமொத்த கணிப்பீடு- (*பின்வரும் பிரிவுகளின் கீழ் சாதாரண சம்பவங்கள், சிறிய சம்பவங்கள், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கு உகந்த சூழ்நிலை தென்படவில்லை).*

மூன்று பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படும் சம்பவங்கள் குறிப்பிட்ட படிவத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. இது வெவ்வேறு இடங்களில் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் கண்காணிப்பாளர்கள் யாவரும் ஒரே அனுமானத்தைப் பயன்படுத்தி சம்பவங்களை வகையிட்டு, தாம் அவதானிக்கும் வாக்களிப்பு நிலையங்களில் நிலவும் நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுப்பதற்கு உதவும்.

நிலைகொள் கண்காணிப்பாளர்கள் அறிக்கைகள், தபால்மூல வாக்களிப்பு அறிக்கைகள், பிரதேச சர்வ கட்சி நடவடிக்கைக் கூட அறிக்கைகள், தேர்தல் முடிவடைந்த தினத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் முன்வைக்கப்பட வேண்டும். இவையும் குறிப்பிட்ட படிவத்தில் உரிய முறைப்படி நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், பெவ்ரலின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## தேர்தல்களை நடாத்துவது தொடர்பான நிருவாக நடவடிக்கைகள்

தேர்தல்களை நடாத்துவது தொடர்பான நிருவாக அலுவல்கள் குறித்த அவசியமான அறிவு கண்காணிப்பாளர்களுக்கு இருக்க வேண்டும். தேர்தல் பொறுப்பு அதிகாரிகளும் அவர்களின் பணிகளும் சுருக்கமாக கீழ் காணபிக்கப்பட்டுள்ளது:

## தேர்தல் ஆணையாளர்

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு அமைய 2002 ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. (இவ்வாணைக்குழுவிற்கு தலைவர் ஒருவர் நியமிக்கப்படாததன் காரணமாக ஆணைக்குழு செயற்படவில்லை) ஆதலால், சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரையில் முழு தேர்தல் செயற்பாட்டையும் இதற்கு முன்பு காணப்பட்டவாறு - தேர்தல் ஆணையாளருக்குள்ள அதிகாரங்கள் அரசியலமைப்பில் அடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவித் தேர்தல் ஆணையாளர்கள்

நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொண்ட நாள் முதல் தேர்தல் செயன் முறையுடன் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் மாவட்ட ரீதியில் அந்தந்த மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களினால் திட்டமிட்டு, மேற்பார்வை செய்யப்பட்டு நிருவகிக்கப்படுகிறது.

## தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்

தேர்தல் மாவட்டமொன்றின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தராக குறித்த தேர்தலை நிருவகிக்கும் பணி ஒப்படைக்கப்படுவது, குறித்த மாவட்டத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தராக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஆவார். இப்பதவியானது பதவிவழியால் குறித்த மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்களால் வகிக்கப்படுகின்றது.

## உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்

தெரிவத்தாட்சி உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் தேர்தல் செயற்பாட்டை நிருவகிப்பதற்காக உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவர்.

## சிரேட்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்

வாக்களிப்பு நிலையத்தினுள் முழுமையான அதிகாரமுடைய உத்தியோகத்தர் இவராவார். வாக்குச்சீட்டுப் பெட்டிகளை பெற்றுக்கொள்வதிலிருந்து, பின்னர் அவற்றிற்கு உரிய முறைப்படி முத்திரையிட்டு சேகரிப்பு நிலையத்திற்கு வழங்குவது வரை வாக்களிப்பு நிலையத்திற்குள் இடம்பெறும் சகல செயற்பாடுகளுக்கும் இவரே முழுப் பொறுப்பாக இருப்பார். உரிய அதிகாரமுள்ள ஒருவரை வாக்களிப்பு நிலையத்திற்குள் அனுமதிப்பதும் உரிய அதிகாரமற்ற ஒருவருக்கு நுழைவு அனுமதியை மறுப்பதும், அல்லாத ஒருவரை வாக்களிப்பு நிலையப் பிரதேசத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுப்பது போன்றவற்றைச் செய்யவும் இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும். வாக்களிப்பின் நிலைமை, வாக்களிப்பைப் பாதிக்கக்கூடிய அல்லது குழப்பியடிக்கக்கூடிய சம்பவங்கள், நிகழ்வுகள் என்பவற்றை இவர் பேரேடு ஒன்றில் குறித்துக் கொள்வார். தேர்தல் முறையாக நடந்ததா என்ற முடிவு எடுக்கும்போதும் ஆள்மாறாட்ட வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கலாமா என் முடிவெடுக்கும்போதும் இப்பேரேட்டில் உள்ள பதிவுகள் கவனத்தில் கொள்ளப்படும். வாக்களிப்பு நிலையத்தில் நடந்த ஒரு சம்பவம் வாக்களிப்பைப் பாதித்ததென்று வாக்களிப்பு நிலைய முகவர்கள் கருதுவார்களாயின், அதனை அப்பேரேட்டில் பதியுமாறு சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தரிடம் வினவ அவர்கள் உரிமை உடையவர்களாவர்.

## கனிட்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்

சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர் இல்லாதபட்சத்தில் கனிஷ்ட வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தராகவும் அவர் இருக்கின்றபோது அவரது உதவி உத்தியோகத்தராகவும் இவர் கடமையாற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம சேவை உத்தியோகத்தர்

தேருநர் இடாப்பைத் தயாரிக்கும்போது தேருநர்களைப் பதிவுசெய்யும் பணியில் உதவுபவர் கிராம சேவை உத்தியோகத்தர் ஆவார். தேர்தலுக்கு அத்தியாவசியமான விடயம் இதுவாகும். அத்துடன், தேர்தல் நடைபெறும் தினத்தின்போதும் தேர்தலுக்கு முன்னரும் வாக்களிப்பு நிலையத்தை ஒழுங்குசெய்வது இவரது பணியாக இருக்கும். வாக்களிப்பு நிலையத்திற்கு அவசியமான தளபாடங்களை ஒழுங்குசெய்தல், தேவையான திருத்த வேலைகளைச் செய்தல், தேர்தல் உத்தியோகத்தருக்கு உணவு மற்றும் தங்குமிட வசதி செய்துகொடுத்தல் என்பனவும் இக்கடமைகளில் அடங்கும்.

## வாக்களிப்பு நிலைய முகவர்கள்

ஓர் அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் நலன்களைப் பாதுகாக்கும் பிரதிநிதிகள் இவர்களாவர். இலங்கையில் அமுலிலுள்ள சட்டத்தின் பிரகாரம், வயது வந்த ஒருவர் வாக்களிப்பதற்கு அடையாள அட்டையோ வாக்காளர் அட்டையோ அத்தியாவசியமில்லை. ஆள் மாறாட்டம் செய்து வாக்களிப்பதைத் தடுப்பதற்கு இவர்களின் உதவி மிக அவசியமாகும். ஒரு கட்சியின் பிரதிநிதிகளான இரண்டு முகவர்கள் மாத்திரமே ஒரு வாக்களிப்பு நிலையத்திற்குள் இருக்க அனுமதிக்கப்படுவர். ஒருவர் ஆள் மாறாட்டம் செய்து வாக்களிக்க முற்படுவதாக சந்தேகிக்கப்படுமிடத்து இவர்கள் ஆட்சேபணை தெரிவிக்கலாம். அவ்வாறான சந்தேகத்திற்குரிய நபர்களிடமிருந்து வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வாக்களிப்பு நிலைய முகவர்கள் தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் கேட்கலாம்.

## அதிகாரமளிக்கப்பட்ட தேர்தல் வேட்பாளர்

ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவொன்றின் வேட்பாளர் பட்டியலில் மாவட்டத் தலைவராக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வேட்பாளர் அதிகாரமளிக்கப்பட்ட வேட்பாளர் என அழைக்கப்படுவார். தனது கட்சிக்கு அல்லது குழுவிற்கான வாக்களிப்பு நிலைய முகவர்களை அவர் நியமிக்க முடியும். அத்துடன், தனது மாவட்டத்திலுள்ள எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திற்கு அவர் விஜயம் செய்யலாம். வாக்குகள் எண்ணும் நிலையத்தில் அவதானிப்பாளர்களாக இருப்பதற்கும் அவர் முகவர்களை நியமிக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரினால் தமது மாவட்ட பிரதிநிதியாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கும் மேற்போன்ற அதிகாரம் உரித்தாகும்.

## வாக்களிப்பு நிலைய கடமையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள்

வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு உதவுவது இவர்களின் கடமையாகும். தமது கடமையை நிறைவேற்றும்போது இவர்கள் தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் உத்தரவுப்படி நடந்து கொள்ள வேண்டும். வாக்களிப்பு நிலையத்திலிருந்து எவரையாவது வெளியேற்றுதல், ஆள்மாறாட்டம் செய்வதாக சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைது செய்தல், அதிகாரமற்ற குழுக்கள் அல்லது நபர்கள் வாக்களிப்பு நிலையத்திற்குள் பிரவேசிப்பதைத் தடுத்தல் என்பன இவர்களின் அதிகாரங்களிலும் கடமைகளிலும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொலிஸ் நடமாடும் காவல் குழுவினர்

தேர்தலுடன் சம்பந்தப்பட்ட முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு இவ்வாகனத்தில் பயணிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### இராணுவமும் ஏனைய பாதுகாப்புப் படையினரும்

தேர்தல் நடைபெறும் தினத்தன்று அமைதியையும் ஒழுங்கையும் பேணுவது மாத்திரமே பொலிஸாரின் கடமையாகும். எனினும். பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாதவாறு அமைதிநிலை சீர்குலையும் அசம்பாவிதங்கள் இடம்பெறுமாயின், அவ்வேளை இராணுவத்தின் உதவி கோரப்படலாம். பாதுகாப்புக் காரணங்களுக்காக வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படலாம்.

பழிக்குப் பழி என்ற கொள்கையை அனைவரும் கடைப்பிடித்தால் உலகில் எவரும் மிஞ்ச மாட்டார்கள் **- மகாத்மா காந்தி**

உங்கள் சுதந்திரத்தையும் எனது சுதந்திரத்தையும் என்றுமே பிரிக்க முடியாது **- நெல்சன் மண்டேலா**

கை விரல்களை விரிக்காமல் மற்றவர்களுடன் கை குலுக்க முடியாது **- மகாத்மா காந்தி**

அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பொது மக்களின் கருத்திற்கேற்ப செயற்படுவதே நியாயமானது. மக்களின் விருப்புடன் செயற்படுத்தப்படும் எந்தவொரு விடயமும் தோல்வி காணாது. அதே போல், மக்களின் கருத்திற்கு முரணாக செயற்படுத்தப்படும் எந்தவொரு விடயமும் வெற்றி அடையாது **- மகாத்மா காந்தி**

எந்தவொரு மனிதனுக்கும் துன்பகரமான சம்பவங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆயினும், உங்களுக்கு மனிதர்களின் உண்மையான நடத்தையை இனங்கண்டு கொள்ள வேண்டுமாயின், அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள் **- ஆபிரஹாம் லிங்கன்**

தவறு செய்பவர்களுக்கு உதவி செய்பவனும் ஒரு துட்டனே ஆவான் **- மார்டின் லூதர் கிங்**

உண்மையைப் பலப்படுத்துகையில் முன்னுரிமை கொடுத்து அதனை நாம் பின்பற்றுவோம். அதன் வழியில் நாம் சென்று எமது தொழிலை முறையாக முன்கொண்டுசெல்வோம் **- ஆபிரஹாம் லிங்கன்**

ஒருவரின் சுதந்திரமானது தனது அயலவனுக்கு அது இடையூறாக அமையுமாயின், அந்தச் சுதந்திரம் அன்றே முடிவுற வேண்டும் **- தோமஸ் ஜெபர்ஸன்**

உங்கள் கடமையை முறையாக நிறைவேற்றாமல் நீங்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையில் எந்தவித பெறுமதியும் காணப்பட மாட்டா **- மகாத்மா காந்தி**

எமது அரசியலின் அத்திவாரம் கோபதாபமும் பழிவாங்கலுமெனில், எமது தீர்மானம் மற்றும் எண்ணங்களைப் போலவே எமது நடவடிக்கைகளும் தோல்வியில் முடியும் **- ரவீந்திர நாத் தாகூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு

(பஃவ்ரல்)

இல. 12/3, ரொபர்ட் டெரஸ்,
ரொபர்ட் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 06.
தொலைபேசி இல: 011-2514441-2
பஃக்ஸ் இல: 011-251443
e-mail : paffrel@sltnet.lk
Website : www.paffrel.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org